Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50




# உதயன்




சுடர் : 39
கதிர் : 348

சனிக்கிழமை
09 நவம்பர் 2024

ஐப்பசி 23
வள்ளுவர் ஆண்டு 2055

## முச்சந்தி முரளி



"எலக்சன் சூறாவளி பத்தாதெண்டு இந்தப் புயல் வேற வருகுது கண்டியளோ"

### வங்கக்கடலில் தாழமுக்கம்

# வடக்கு நோக்கி புயல் நகரலாம்!

**யாழ்ப்பாணம், நவம்பர் 9**

**வங்கக் கடலில் எதிர்வரும் 23ஆம் திகதி காற்றழுத்தத் தாழமுக்கம் ஒன்று ஏற்படவுள்ளதாகவும், அது புயலாக மாற்றம் பெற்று வடக்கு நோக்கி நகர்வதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

15

## தடுப்பூசி!

யாழ்ப்பாணம், நவ. 9

சுகாதாரத்துறையின் ஏற்பாட்டில் சின்னமுத்து தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் இன்று சனிக்கிழமை நாடு

15

## படையினர் வசமுள்ள காணி படிப்படியாக விடுவிக்கப்படும்



யாழ்ப்பாணம், நவ. 9

பலாலி உள்ளிட்ட உயர் பாதுகாப்பு வலயத்தில் படையினரின் வசமுள்ள காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் பிமல் ரத்நாயக்க

15

### காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

## படகுச் சேவையில் அசௌகரியம்; ஆளுநர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 9

காங்கேசன்துறை நாகப்பட்டினத்துக்கு இடையிலான பயணிகள் கப்பற்சேவை தொடர்பாக முறைப்பாடுகள் மற்றும் திருப்தியின்மைகள் முன்வைக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

15

## வெடுக்குநாறிமலை ஆலய விவகாரத்தில் இருவர் ரி.ஐ.டி விசாரணைக்கு அழைப்பு!

வவுனியா, நவ. 9

வவுனியா வடக்கு வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விவகாரம் தொடர்பில் அந்த ஆலயத்தின் முன்னாள் உறுப்பினர்

15

### யாழ். மாவட்டத்தில்

## இடைவிலகிய மாணவர்களை மீளிணைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைப்பது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

15

## சமூக ஊடகப் பயன்பாடு மாணவர்கள் அவதானம்!

### கல்வி அமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, நவ. 9

பாடசாலைக் கல்வி மற்றும் தகவல் தொடர்பாடலுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது குறித்து அவதானமாக இருக்குமாறு கல்வி அமைச்சு விசேட சுற்றறிக்கை

15







சுயேச்சைக்குழு 14




பேரன்புக்குரிய வாக்காளர்களே..!

40 வருடங்களுக்கும் மேலாக
போரென்ற பெருந்தீயைக் கண்டு
சிதறியோடி சிங்காரமாய் இருந்துவிட்டு
சில்லறைகளோடு இறக்குமதியான
சிறுபதர் அல்ல நான்.

பதறிய உங்களின்
கண்ணீரையும், கவலையையும் துடைக்க
உங்களில் ஒருவனாகவும்
உங்களுக்காய் ஒருவனாகவும்
தாய்மண்ணை விட்டகலாமல்
தளராமல் உங்களுக்காக நீதி கோரிய
சரவணபவன் நான்
உங்களுக்காக எழுதும் மடல் இது.

நாடெங்கிலும் துப்பாக்கிமுனைகள்
ஊடகங்களின் கழுத்தை நெரித்த
உயிர் அச்சுறுத்தல் காலத்தில்
உங்களுக்காக துணிந்து நின்றேன்.

தமிழரசுக் கட்சியின் தலைமகனாக
வாகை சூடி வென்று நாடாளுமன்றம் சென்று
வகைகள் பலவும் புரிந்திட்டதால் உங்கள்
வாசலெங்கும் வசந்தம் வீசிடச் செய்தவன்
இப்போது மாம்பழச்சின்னத்தில்
ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின்
தலைமையில் உங்களிடம் வந்துள்ளேன்.

நான் 40 வருட ஊடகச் சமராடி
சமூகப் பணிகள் புரிந்ததைப் போலவே
தவராசாவும் 40 வருட சட்டச் சமர் புரிந்து
சிறைக்கூண்டுக்குள் சிக்கிய
தங்கமணி , குட்டித்துரை முதல்
1000 க்கும் மேற்பட்ட வழக்குகளில் வாதாடி
அப்பாவிகளின் சிலுவைச் சிறைகளை
எப்போதுமே இல்லாதாக்கியவர்
தமிழரசுக் கட்சியோடும்
அவருக்கு 40வருடப் பிணைப்பு
ஆனால் இவை எல்லாவற்றையும்
தூக்கியெறிந்துவிட்டு

அவரும் நானும் ஏன்
ஜனநாயகத் தமிழரசாக
தனிவழியே களமிறங்கினோம்?

(காரணங்கள்
06 பக்கத்தில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 திசையும் சூரியன்

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)



வெளிப்படையான பேச்சு

அரசியல் நேர்மை

பதவிக்கு விலை போகாமை

## வீ.ஆனந்தசங்கரி

X 8

யாழ் – கிளி தேர்தல் மாவட்டம்



## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



## இம்மானுவல் ஆனல்ட்

B.A (Hons) Phil. Spl
MSS Limra International (USA)
AMTC Limra International (USA)

- முன்னாள் முதல்வர், யாழ் மாநகர சபை.
- முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.
- மொழிப்பற்றாளன்.

X 2

"தமிழரின் தாகம் தமிழ்த் தேசியம்"

தமிழ் தேசியத்திற்காய் என்றும் தடம்மாறாத பயணம் ....

# நீண்ட வரலாற்றுப் பின்னணியை கொண்ட யாழ் பல்கலையில் இருந்து ஒரு குரல் தமிழரின் குரலாக ஒலிக்கட்டும்!!



X

சுயேட்சை குழு 13

கி.கிருஷ்ணமீனன்
யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர்

1 5

மசனையா தர்சிகன்
யாழ்.பல்கலைக்கழக மாணவன், பௌதிகவியல் ஆசிரியர்

யாழ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய தலைவர் தலைமையிலான கறைபடியாத கரங்களை கொண்ட மாற்றத்திற்கான தமிழ் தேசிய இளைஞர் அணி



9 8 7 6 4 3 2

## தமிழ் மக்கள் கூட்டமைப்பு

# பாராளுமன்றத் தேர்தல் 2024 யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




2
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
LLB (Hons)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

5
நடராஜர் காண்டீபன்
LLB (Hons)
சிரேஸ்ட சட்டத்தரணி

9
செல்வராசா கஜேந்திரன்
BBA
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

## இரு தேசங்கள் ஒரு நாடு





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கலந்து கொள்ளும்

## மாபெரும் பொதுக்கூட்டம்...!

10.11.2024 (ஞாயிறு) மல்லாகத்தில்...!

மாலை 4.30 மணிக்கு

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் முன்பாக

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சல் சின்னம்



X 4

சுயேச்சைக் குழு - 2



**கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.**

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

**தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.**

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...
அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...
இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்கக்கூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...
வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக் செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...
கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...
தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**

பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

களத்தில் கமல்

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













## இலஞ்சம் பெற்ற அதிபர் கைது

கொழும்பு, நவ.9

ராகம ஆரம்பப் பாடசாலை ஒன்றின் அதிபர் இலஞ்சம் பெற முயன்ற போது இலஞ்ச ஊழல் பற்றிய புலனாய்வு செய் யும் ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள் ளார். ராகம மத்துமாகல பிரதேசத்தில் சிறுமியொருவரை முதலாம் தரத்துக்கு அனுமதிப்பதற்காக ஒருவரிடம் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயி ரம் ரூபாவை இலஞ்சமாக வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

(ச-இ)

## இந்திய மாதிரிக் கிராமங்கள் கையளிப்பு

கொழும்பு, நவ. 9

மொனராகலை மாவட்டத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மாதிரிக் கிராமம் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவினால் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரிக் கிராமத்தில் 24 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் இந்த மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

பதினொரு மாவட்டங்களில் இந்த மாதிரிக் கிராமங்கள் அமைக்கும் பணிகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

(ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கு மாம்பழம்




சுயேச்சைக்குழு 14





நாமொன்றும் நேற்றுப்பெய்த
தேர்தல் மழைக்கு
இன்று முளைத்த காளான்களல்லவே.
அரசியலுக்குள் காலடி வைத்திடமுன்னரே
மக்களுக்காகவும் மண்ணுக்காகவும்
நான் செய்த சேவைகளை
நெஞ்சில் நன்றியுள்ள ஒவ்வொருவரும்
நினைவில் ஏந்தாமல் இருக்கார்.

## நாடறிந்த நற்பணிகள் றோட்டறியினூடாக...!

றோட்டறிக் கழகமெனும் தொண்டு அமைப்பின்
தலைமைத்துவத்தினூடாக
தமிழர்களுக்கு என்னென்ன செய்யலாமோ
அமிழ்தென அனைத்தும் செய்தேன்
தலைமைத்துவம், ஆளுமையொடு
சேவை செய்யும் விருப்புக்கொண்ட
நாளைய தலைவர்களை
நாட்டுக்கு புடமிட்டுத் தந்தேன்.
வெள்ளப்பேரிடருக்கு நிவாரணம்,
பெண் தலைமைக்குடும்பங்களுக்கு
தையல் உபகரணங்கள்
உறைவிடம் இல்லாதோர்க்கு இருப்பிடம்
மறைமுகமாகவும் நேரடியாகவும்
இத்தனையும் நான் செய்ததை அறிவீர்கள்,

ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று
பன்முகப்படுத்தப்பட்ட நிதியோடு
நின்றுவிடாமல்
அதேவேளை தன்னிலையும் கெடாமல்
தன்மானத்தையும் விடாமல்
அரசிடமிருந்து இன்னும் நிதி பெற்று
மக்களின் வாழ்வுக்கு
உறுதுணை புரிந்தேன்.

## அறிவின் வாசல்களைத் திறந்த 'கேற் வே' கல்விச்சேவை

குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும்
மந்தைகளாக மாணாக்கரை மழுங்கடிக்காமல்
'கேற் வே' எனும் கல்விச்சாலையூடாக
அறிவின் வாசல்களை
நான் அகலத்திறந்து
அகிலத்தில் அவர்தம் வாழ்வில்
ஒளியேற்றிடச் செய்தேன்.

## ஊடகவியலாளர்களுக்கு நிதியும் நீதியும்

போர் இருளுக்குள் மறைந்து
கேடயமற்றிருந்த
ஊடகவியலாளர்களை
கொன்றும், கடத்தியும் ,மிரட்டியும்
அவர்களின் பேனாமுனைகள்
சிதைக்கப்பட்டபோது
அவர்களுக்காக நீதி கோரிய
என் நெடும்பயணம் இன்னும்
நீண்டு தொடர்கிறது.
கோரமாகக் கொல்லப்பட்ட
ஊடகவியலாளர்களுக்காக நிதிதிரட்டி
அவர்தம் குடும்பத்தினர்க்கு
கொடுத்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

## ஆழியின் அவலத்தை துடைத்தல்

ஆழிப் பேரலை காவுகொண்ட
குடும்பங்களின் பொருளாதாரத்தை
மீண்டெழ வைத்திட ஆண்டுகள் பலவாய்
தோள் கொடுத்தவர்களில் நானும் ஒருவன்

## எந்நாளும் முன்னாள் போராளிகளுக்காக...

பேர் துறந்து. உறவு துறந்து
ஊர் துறந்து எமக்காக களமாடிய
முன்னாள் போராளிக்காக
எந்நாளும் என் வாசல் திறந்திருக்கும்
வேலைவாய்ப்பு முதல் வாழ்வாதாரம் வரை
அவர்களுக்காக செய்தவற்றையெல்லாம்
சொல்லித்தான் தெரியவேண்டுமென்றில்லையே.

## அங்கமிழந்தோருக்கும் மங்காத வாழ்வு

போராலும், இயற்கையாலும்
நாராகக் கிழிக்கப்பட்டு
கால், கை எனும் அங்கங்களை
இழந்து வாழ்வே இருளாகி நின்றோர்க்கு
செயற்கை அவயவங்களை
சிறப்பாகவே பொருத்தி அவர்கள்
சீரோடு வாழ்ந்திடவழி செய்தேன்.



இவை மட்டுமா?

தமிழ்த் தேசியத்தின் குரலாக
தடம்மாறாப் பயணத்துக்கு
திடம் சேர்க்கும் ஊடகங்களாக
நான்கு தசாப்தங்களாக
உதயன், சுடரொளி என்பன
தலைநகர் முதல் தாய்நிலம் வரை
தலைநிமிரவைத்தன தமிழர்களை!

பொய்மைகளைப் பொசுக்கின
நீதிக்காக நிதமும் பொங்கின
சேதியோடு சேவையும் செய்தன.
ஆட்சியாளர்களின் அராஜகங்களை
அப்பட்டமாக தோலுரித்தன.

ஆனாலும்...,

இதனால் நானும் என் ஊடகங்களும்
சந்தித்த சவால்களும், விலைகளும்
சொல்லில் அடங்காதவை.

உயிரிழப்புகள், சொத்திழப்புகள்,
தடைகள், சோதனைகள், கைதுகள்,
காட்டிக்கொடுப்புகள், வழக்குகள்,
விலைபேசல்கள்,
பிறிதொரு நிறுவனத்தில்
பணியாற்றிய குற்றத்துக்காக
இன்றும் தொடர்கின்ற
அபாண்டமான சேறுபூசல்கள்



இவையெல்லாம் இடைவெளியின்றி
அம்புகளாகி ஏவிவிடப்பட்டபோதும்
அத்தனையும் உங்களுக்காக
தாங்கிக் கொண்டவன் நான்.

நான் தேடிய செல்வம் அத்தனையும்
ஊரறியாமல், உலகறியாமல்
உரிமைப்போரின் வேருக்கே சென்றதும்
உங்களிக்குத் தெரியும்.

அரசியலுக்கு வந்த பின்
எங்கள் மக்களுக்காக
ஆயிரத்து அம்பத்தாறு மில்லியன் ரூபா
அபிவிருத்திகளை
கொணர்ந்தவன் நான்.

தமிழரசுக் கட்சியின்
மூச்சுக்காற்றையும்
தமிழ்த் தேசிய நெருப்பையும்
அணையவிடாமல்
அரணாய் நின்றவர்களில் நானும் ஒருவன்.
ஆனால் சந்தர்ப்பவாதச் சர்ப்பங்கள்
தமிழரசுக்குள் புற்றெடுத்தன.

தாளம் போடுவோருக்கும்
மேளம் கொட்டுவோருக்கும்
மட்டுமே அவை பல்லக்குத் தூக்கின.
தமிழ்த் தேசியத்தை நீக்கம் செய்தன

தமிழரசின் ஆன்மா
தமிழ்த் தேசியமே
அந்த ஆன்மா இல்லாதவிடத்தில்
எப்படி நாங்கள் இருப்பது?
தன்மானத்தோடு தமிழ்மக்களுக்காக
மண்மானம் காக்கவென நாம்
மாம்பழச் சின்னத்தில் இப்போது.

**மாற்றம்
வேண்டுமெனில்
மாம்பழமே
உங்கள்
தெரிவாகட்டும்**



**உதயன்
சரவணபவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்





2 9

### உரிமைக்கான போராட்டக் களங்களில்....

வெடுக்குநாறி மலையில் பொலிசாரினால் சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டவர்களை வழக்காடி விடுவித்தபோது






பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில்




ஜனாதிபதியின் வருகைக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது

### தடம் பதித்த சுவடுகள் சில ...

- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக்கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபை உட்படச் சர்வதேச மன்றங்களில் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றமை.
- காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுகின்றமை.
- தையிட்டி, நிலாவரை, காரைநகர், மண்டைதீவு, மாதகல், சுழிபுரம் (பறாளாய்), கிளிநொச்சி (உருத்திரபுரீச்சரம், பொன்னாவெளி, சந்திரன் பூங்கா), குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை, மாதவனை, மயிலத்தமடு, கல்முனை என்றவாறாகத் தமிழர் தேசம் எங்கும் நிலமீட்புப் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்தமை.
- நூற்றுக்கும் மேற்பட்ட பொதுநல வழக்குகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கட்டணமின்றி வழக்காடியமை.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப் பட்டபோது மாணவர்களுக்குத் துணையாக நின்று உடைக்கப்படவிருந்த மாவீரர் தூபியை உடைக்கவிடாமல் தடுத்து நிறுத்தியமை.
- நாட்டுப்பற்றாளர் நடேசன் அறக்கட்டளை வாயிலாக உதவி வேண்டும் மக்களுக்குக் கல்வி, விளையாட்டு, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை.
- நீதியைப் பெறுவதற்கு ஏழ்மை தடையாகி விடக்கூடாது என்பதற்காகத் "தமிழர் உரிமைகள் கண்காணிப்பகம்" (Tamil Rights Watch) எனும் இலவசச் சட்ட மையத்தினைச் செயற்படுத்தி வருகின்றமை.
- தமிழ்த் தேசத்தில் இளைஞர், யுவதிகளுக்குச் சுயதொழிற் பயிற்சிகளை வழங்கித் தற்சார்புப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அவர்களைத் தொழில் முயற்சியாளர்களாக்கும் இலக்கோடு "இலவசப் பயிற்சி மையம்" வட்டுக்கோட்டையில் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

### தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்...







### இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!





ஈழத் தமிழரின்
உரிமைக் குரலை ஆதரிப்போம்!



கனகரட்ணம்
# சுகாஷ்
(சட்டத்தரணி)

**கனகரட்ணம் சுகாஷ்** ஆகிய நான்,



தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைசார் அரசியல் பயணத்தில் கொள்கை தவறாது என்றும் மாவீரர்கள் காட்டிய பாதையில் நேர்மையுடன் பயணிப்பேன் என இத்தால் உறுதியளிக் கின்றேன். இப்பயணத்தில் நான் தடம்மாறினால் எந்நேரமும் எவ்விடத்திலும் என்னைக் கேள்வி கேட்கவும், ஏன் தூக்கி வீசவும் உங்களுக்குப் பூரண உரிமையும் அதிகாரமும் உண்டு.

அன்புரிமையுடன்,
க.சுகாஷ்

தொ.இல: 077 936 1354



X 1

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
26 . 03 . 1940



விண்ணில்
06 . 11 . 2024

## நவரத்தினம் இரத்தினபூவதி

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் இரத்தினபூவதி அவர்கள் கடந்த 06.11.2024 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயபாலன், காலஞ்சென்ற ஜெயலலிதா, ஜெயராஜன் (சுவிஸ்), ஜெசிக்கா (ஜெயலதா - லண்டன்), ஜெயந்தி (கொழும்பு), ஜெயநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மினிதேவி, காலஞ்சென்ற ஸ்ரெனிக்குலஸ் (லண்டன்), சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிசன் - லதா, நிஷாந்தி - கமலதாசன் (பிரான்ஸ்), மதுரா - கணேஷதாசன், ஷரோன் (சுவிஸ்), றொஷாந்தன் - நற்றலி (லண்டன்), அஜித்தா - ஜோ பெரீரா (லண்டன்), பிரதீப் (பிரான்ஸ்), வைஷாலி (கொழும்பு), லக்சிகா - றசிதரன் (லண்டன்), அனுஷன், ஆர்த்திகா - சயந்தன், பிரியந்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தீபிகா (பிரான்ஸ்), தீபிகன் (பிரான்ஸ்), திபிஷன் (பிரான்ஸ்), நிருஷன் (பிரான்ஸ்), அபிநயா, துஸியா, அஸ்வின், லிவிஸ் (லண்டன்), லியா (லண்டன்), அஜய் (லண்டன்), அஜானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்
077 912 2868, 077 640 7343

(CS/56629) J-1

# 31 ம் நாள் நினைவஞ்சலியும் மதிய போசன அழைப்பும்

தோற்றம்
31 . 12 . 1996



மறைவு
08 . 10 . 2024

கடந்த 08.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த

அமரர்
## வேலாயுதபிள்ளை மோகனப்பிரியன்

அவர்களின் 31 ம் நாள் நினைவஞ்சலியும் மதிய போசன நிகழ்வும் இன்று (09.11.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நாவற்கட்டை வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 853 5094

(CS 1801) P-1

# கேள்வி அறிவித்தல்
## யாழ் மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

1. எமது சமாசத்தின் நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.
2. **யாழ் மாவட்டக் கூட்டுறவு கிராமிய வாங்கிகளின் சமாசம் சார்பாக** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றது.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் யாழ் மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் -0212222639 Email-jdcrbu@gmail.com பெற்றுக்கோள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 11-11-2024 ஆம் திகதியிலிருந்து 25-11-2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை பெறுகைக்குழு யாழ் மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் அவர்களிடம் இருந்து 11-11-2024 ஆம் திகதியிலிருந்து 25-11-2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 முதல் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீள்ளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 (Vat நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **"தலைவர். பெறுகைக்குழு யாழ் மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்" இல 95, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 27-11-2024 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி நேரம் முடிந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| Co-oP /2024/02 | Construction of Shopping Complex – Ground Floor | 15 million | 150 Days | 80,000.00 | 90 Days |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 20.11.2024 ஆம் திகதி 2.30 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் மண்டபத்தில் இடம் பெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்.**

(CR/43641) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 10 . 1949



மறைவு
08 . 11 . 2024

## திருமதி சின்னத்துரை சரஸ்வதி (வேவி)

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சரஸ்வதி நேற்று (08.11.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நல்லம்மா தம்பதிகளின் புதல்வியும் பொன்னுத்துரை தங்கரத்தினம் ஆகியோரின் மருமகளும் சின்னத்துரை (இளைப்பாறிய நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கக்கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் மதிவதனி (கனடா), தர்சினி (தொழில் துறை திணைக்களம் வடக்கு மாகாணம்), கயேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகரூபன் (கனடா), செந்தில்குமரன் (மின்சாரசபை), கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் லாவன்யா, துர்கேஸ், லக்சன்யா, ஏரகன், தர்வின், அனுரகன், லக்சிதா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற செல்லத்துரை, தியாகராசா, பாக்கியலட்சுமி, நடராசா மற்றும் ஆனந்தராசா (லண்டன்), மனோகரஞ்சிதம்.ரதிதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகராசசிங்கம், காலஞ்சென்ற தவலட்சுமி மற்றும் தவராசலிங்கம், ஞானலிங்கம் காலஞ்சென்றவர்களான கண்மணி, அருமைத்துரை சுந்தரேஸ்வரி மற்றும் ஜெகசோதியம்மா, யோகேந்திரன், ஜீவகுமாரி, சிவகுமாரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2024) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 912 4020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையை வெளிப்படுத்த சங்குக்கு வாக்களியுங்கள்

## வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.9**

**தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த மக்கள் ஒவ்வொரு வாக்குகளையும் சங்குச் சின்னத்துக்கு வழங்கவேண்டும். அதனூடாக ஜனநாயக வழியிலான தமிழ் மக்களின் உரிமைக்கான பயணம் நேர்த்தியாக முன்னெடுக்கப்படும்.**

- இவ்வாறு உடுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கு பலரும் இறக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் இதில் தெளிவாக இருக்க வேண்டும்.

எமது கூட்டணி கட்சிகளை ஒன்றிணைத்து பலமான அனுபவமானவர்களை ஒன்றிணைத்து பயணிக்கிறது.

ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணம் தொடர மக்கள் சங்குச் சின்னத்து ஆதரவு வழங்க வேண்டும்- என்றார். (ச-26)

# சின்னமுத்து அபாயத்தை தடுப்பூசியால் தடுப்போம்

## ஆ. கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

நாட்டில் சின்னமுத்து மீண்டும் பரவத்தொடங்கியுள்ளது. சின்னமுத்து நோய்ப் பரம்பலை எமது நாட்டில் கட்டுப்படுத்தும் நோக்குடன் சின்னமுத்து தடுப்பு வாரம் சுகாதார அமைச்சால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். சின்னமுத்து நோய் 20 முதல் 30 வயதினரிடையேயும் தொற்று அதிகளவு பரவும் அபாயத்தன்மை காணப்படுகிறது. எனவே 20 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதன் மூலம் சின்னமுத்து நோய் பரவும் ஆபத்திலுள்ளவர்களை பாதுகாக்கமுடியும். இந்த தடுப்பூசியானது உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியை பெற்றுள்ளதுடன் அதன் தரமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தத் தடுப்பூசியை பெற்று சின்னமுத்து நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# கசிப்புடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது

யாழ்ப்பாணம், நவ. 9

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் 12 போத்தல் கசிப்புடன் கைதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபரை வட்டுக்கோட்டை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். இதன்போது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (ச-27)

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். நகரில் 120 மில்லி கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ச-27,20)


# புத்தளத்திலும் பொத்துவிலிலும் நவீன ராடர்கள்

கொழும்பு, நவ.9

ஜப்பானிய அரசின் நிதியுதவியில் புத்தளத்திலும், பொத்துவிலிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டு கைவிடப்பட்டிருந்த வானிலை முன்னறிவிப்பு ராடர்கள் மீண்டும் பொருத்தப்படவுள்ளன. இந்த ராடர்கள் காலநிலை மற்றும் வெள்ளம், புயல் போன்ற இயற்கை அழிவுகளை முன்கூட்டியே துல்லியமாக கணிக்கக் கூடியவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களுக்கென ஜப்பானிய அரசு வழங்கிய நிதியை ராஜபக்ச அரசாங்கம் வேறு திட்டங்களுக்கு மாற்றியமைத் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# போரால் பாதிக்கப்பட்டோரை ஆற்றுப்படுத்துவோம்!



## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான ஆற்றுப்படுத்தல்களை நாங்கள் செய்வோம் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரியா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சகல விதமான மனிதாபிமான உதவிகளையும் நாங்கள் செய்வோம்.

அதனூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தயாராகவுள்ளோம்.

குறிப்பாக மீள்குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)




அடிக்கிற கை அணைக்கிற மாதிரி, அணைக்கிற கையால அடியும் விழுமெண்டதை சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரச்சினையோட பேமஸான டாக்குத்தர் விளங்கியிருப்பார். நாலைஞ்சு மாதத்துக்கு முதல் அந்த டாக்குத்தருக்காக இஞ்சத்தை சனம் உயிரை விடக்கூட தயாரா இருந்தது. ஆனால் இப்ப அவரை ஒரு துரும்பளவுக்கு கூட மதிக்கிறதுக்கு ஒருத்தரும் ரெடி இல்லை. அதுக்கு முழுக்காரணமும் வேற ஆருமில்லை. அதே டாக்குத்தர் தான். அவர் ஆஸ்பத்திரிப் பிரச்சினையோட தன்ர வாயைவைச்சுக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம். ஆனால் நுணல் தன்ர வாயால கெட நினைச்சால் ஆர்தான் என்ன செய்யமுடியும். மாரித்தவக்கை மாதிரி அல்லும்பகலும் பேஸ்புக்கில லைவ் விட்டு, தனக்குப் பின்னால 93 ஆயிரம் பேர் இருக்கினம் எண்ட புளுகத்தில ஆள் தலைகால் தெரியாமல் ஆடின ஆட்டம் கடைசியா அரசியலில கொண்டந்து விழுத்திட்டுது.

சரி, முதல்தான் ஏதோ அரைகுறை அறிவோட இப்பிடி எல்லாத்தையும் குழப்பிட்டார், இந்தமுறை அவரோட கணிதபாடத்தில இலங்கையிலேயே முதலாவது வந்த ஒராள் நிக்கிறார் எண்டதால அவரில மாற்றம் வருமெண்டு சனம் நம்பினது. கொஞ்சநாள் அந்த டாக்குத்தரும் அச்சாப்பிள்ளை மாதிரித்தான் நடந்தவர். தன்ர கட்சிக்காரர் வாயைத் திறக்கவேண்டாமெண்டு சொன்னால், உடனேயே அதைக்கேட்டு ஒண்டும் சொல்லாமல் இருக்கிற அளவுக்கு ஒரு மாற்றம் தெரிஞ்சது. ஆனால் எல்லாம் ஒரு கொஞ்சநாளைக்குத்தான். பிறகு வேதாளம் திரும்ப பேஸ்புக் லைவில ஏறிட்டுது. டாக்குத்தருக்கு பேஸ்புக் லைவில போனால் தானொரு அசாகயசூரன் எண்ட நினைப்பு வந்திடும் போல. ஆரெல்லாம் அவருக்கு உதவிச்சினமோ, ஆரெல்லாம் பக்கபலமா நிண்டிச்சினமோ அவையோ உறண்டை இழுத்து, அவையைப் பற்றிக் கேவலமாக் கதைச்சு பகையை வளர்க்கத்தான் டாக்குத்தர் பேஸ்புக் லைவுக்கே வருவார். எங்கட ஆக்களில சிலர் எல்லா வருத்தத்துக்கும் எடுத்த எடுப்பில பனடோலைப் போடுற மாதிரி, டாக்குத்தருக்கு எல்லாப் பிரச்சினைக்கும் சர்வரோக நிவாரணி உந்தப் பேஸ்புக் லைவ் தான். அதோட சாடிக்கேத்த மூடிமாதிரி ஒரு நீதிதேவதையும் அவருக்குதாளம்போட, இப்பதன்ரசுயேச்சைக்குழுவுக்கு எதிரா தானே பிரசாரம் பண்ணுற உலகமகா சாதனையை செய்துகொண்டிருக்கிறார். இப்பிடி சொந்தச் சுயேச்சைக்குழுவில இருக்கிறவைக்கு எதிராக் கதைச்சு, அவையைக் கேவலப்படுத்தி, அவைக்கு வாக்குப் போடவேண்டாம் எண்டு சொல்லுற அளவுக்குத் தான் அவரின்ர அரசியல் ஞானம் இருக்குது.

தன்னை நம்பி எலக்சன் கேக்க வந்தவையையே இப்பிடிக் கேவலப்படுத்தி, நடுறோட்டில கைவிடுறார் எண்டால், என்னெண்டு சனம் தங்களுக்காக உந்த டாக்குத்தர் குரல் குடுப்பாரெண்டு நம்பிறது? 'எப்பிடி வசதி?' எண்டு கேட்டபடி ஆள் அங்காலிக் கன் னைக்கு மாறும் எண்டதில சந்தேகம் இல்லை. அப்பிடி மாறினாலும் அங்கையும் கொழுவல் எடுத்து ஒவ்வொரு இடமாத் தாவுறதுக்கோ உவர் எலக்சன் கேக்கிறார் எண்டு சனம் புறுபுறுக்கத் தொடங்கிட்டுது. அதால தான் சுன்னாகம் சந்தையிலையும், சாவகச்சேரிச் சந்தையிலையும் சனங்கள் நேரடியா ஆளை எதிர்த்துக் கதைச்சு, அடிச்சுக் கலைக்காத குறையா அங்கையிருந்து அப்புறப்படுத்தி இருக்கினம். இனியாவது ஆள் வாயைச் சும்மா மூடிக்கொண்டிருந்தால் உந்த அவமானங்கள் வராதெல்லோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## திறன்பேசிகளும் திசைமாற்றங்களும்

இலங்கையில், பாடசாலை மாணவர்களிடையே சமூகவலைத்தளங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், அவை மாணவர்களிடையே எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்துவதால், வலைத்தளங்களை மாணவர்கள் அணுகுவதில் மிக அவதானம் தேவை என்றும் கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது. அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் இந்த விடயத்தில் கூடுதலான அக்கறையுடன் செயற்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை சமூக வலைத்தளங்கள் எனப்படுபவை 'மெல்லக் கொல்லும் நஞ்சாகவே' காணப்படுகின்றன. இது இலங்கைக்கு மட்டுமான பிரச்சினையல்ல. முழு உலகமும் இன்று மாணவர்களிடம் இருந்து சமூக ஊடகங்களை வெகு தொலைவாக வைப்பதற்கு கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. ஆகப்பிந்தியதாக, 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பாவிப்பதற்கும், அணுகுவதற்கும் அவுஸ்திரேலிய அரசாங்கம் நேற்றுத் தடைவிதித்திருக்கின்றது. இதன் தொடர்ச்சியாகவே இலங்கை அரசாங்கத்தின் சுற்றறிக்கையும் அமைந்திருக்கின்றது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஒட்டுமொத்த கற்றல் செயன்முறைகளும் முடங்கிப் போயின. பெருந்தொற்று எப்போது முடியும், கல்விச் செயன்முறைகள் எப்போது வழமைக்குத் திரும்பும் என்பது தொடர்பான அந்தம் தெரியாததால், சில மாற்றுச் செயற்றிட்டங்கள் துரிதகதியில் பரிசீலிக்கப்பட்டன. அவற்றில் பிரதானமானது மாணவர்களின் கரங்களில் திறன்பேசிகளை வலிந்து திணிக்கும் முடிவு. திறன் பேசிகளைப் பறித்துவிட்டு புத்தகங்களைக் கொடுத்த காலம்மாறி, திறன்பேசிகள் மூலமாகவே கற்றல் என்று ஒட்டுமொத்த உலகக் கல்விமுறையும் மாறியது. இது மாணவர்கள் சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்துவதற்கும், கலாசார சீரழிவிலும், சமூகப் பிறழ்வான நடத்தையில் ஈடுபடுவதற்கும் காரணமாகியது.

இன்றைய உலகில் திறன் அலைபேசிகளும், தொடுதிரைகளும், சமூக வலைத்தளங்களும் ஆக்கிரமிக்காத இடங்களே இல்லை. இதனால், அவற்றை அணுகுவதும், காலப்போக்கில் அவற்றுக்கு அடிமையாகிவிடுவதும் மிகச்சாதாரண சம்பவங்களாக இன்று மாறிவிட்டன. இதனால் நன்மைகள் இல்லாமலுமில்லை. வர்த்தகம், கல்வி, தொடர்பாடல் போன்ற துறைகளில் சமூகவலைத்தளங்களும் தொடுதிரைகளும் இன்று தவிர்க்கப்படமுடியாத சக்திகள். ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு மனிதகுலம் இவற்றை நெருங்கிநெருங்கிச் செல்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு 'மீண்டும் இணைக்கப்பட முடியாத' இடைவெளி எமக்குள் வேர்விட்டு வளரவே செய்கின்றது.

மாணவர்களிடம் இன்று திறன்பேசிகள் இருக்க வேண்டும்தான். ஆனால், அவற்றின் மீதான கண்காணிப்பை பெற்றோரும், பாதுகாவலர்களும் இறுக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். மாணவர்களை தொடுதிரைகளில் இருந்தும் சமூக வலைத்தளங்களில் இருந்தும் தூரவைப்பதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இல்லையேல், திறன்பேசிகள் ஏற்படுத்தும் திசைமாற்றங்கள் கணித்து அறிந்துகொள்ளமுடியா நிலையில் இருக்கும்.



# பொதுத்தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

கொழும்பு, நவ, 9

**நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுமையாக பூர்த்தியாகியுள்ளதுடன், இறுதிக்கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. தேர்தலை முன்னிட்டு இறுதிக்கட்டப் பிரசாரத்தில் கட்சிகள் ஈடுபட்டுள்ளதுடன், எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவுடன் பிரசார நடவடிக்கைகளும் நிறைவடையவுள்ளன.

கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகிய தபால்மூல வாக்களிப்பு நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவுபெற்றுள்ளது.

அடுத்தவார ஆரம்பத்தில் வாக்குப் பெட்டிகள் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளதுடன், அங்கிருந்து தேர்தலுக்கு முதல்நாள் வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படவுள்ளன.

அதேவேளை வாக்களிப்பைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## புலம்பெயர் தொழிலாளர் பணவனுப்பல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்பல் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அதன்படி, 2023 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டு ஊழியர்களின் பணவனுப்பல் 4345 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது. அது இந்த வருடத்தின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 4844 மில்லியன் அமெரிக்க டொலராகஅதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச)



## கொரியா நிதியுதவி

கொழும்பு நவ. 9

ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக கொரிய அரசாங்கம் இலங்கைக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

அதன்படி 10.20 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2024-2028 காலகட்டத்தில் உள்ளூராட்சி மட்டத்தில் திண்மக் கழிவு மேலாண்மை பொறிமுறையை நிறுவும் மறைமுக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பிரமிட் மோசடி தம்பதியர் கைது

கொழும்பு, நவ.9

பிரமிட் மோசடியில் ஈடுபட்ட வர்த்தகரும் அவரது மனைவியும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் பிரமிட் வர்த்தகத்தினூடாக குருநாகலில் 1.8 பில்லியன் ரூபா மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னர் மலேசியாவுக்குச் சென்ற அவர் நாடு திரும்பிய வேளையில் விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை வரவேற்கச்சென்ற அவரின் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-6)

## தேயிலை விற்பனை வீழ்ச்சி



இலங்கையின் தேசிய தேயிலை விற்பனை கடந்த ஒக்ரோபர் மாதத்தில் சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 1,207 ரூபா 99 சதமாகக் காணப்பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலை ஒக்ரோபர் மாதத்தில் 1,172 தசம் 15 ரூபாவாக குறைவடைந்துள்ளது என்றும் இலங்கை தேயிலை சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

### நாளை

10.11.2024

ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி - 24

சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 -06.05

### நாளொரு நல்வார்த்தை

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."

- லியூசி லார்கோம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதத்தை ஆதரிப்பது தமிழ்மக்களுக்குத் தீர்வாகாது!

## வேட்பாளர் கிருஷ்ணமீனன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ. 9**

**சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களிப்பது எமது இறையாண்மையையும் தமிழ்த் தேசிய சுயநிர்ணய உரிமைகளையும் பறிகொடுப்பதற்கு ஒப்பானது. தமிழ் மக்கள் இதனை உணர்ந்து சிந்தித்து வாக்களிக்கவேண்டும்.**

-இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டமைப்பின் சுயேச்சைக்குழு 13 இல் கரும்பலகைச் சின்னத்தில் போட்டியிடும் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் கி.கிருஷ்ண மீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எமது பாரம்பரிய தமிழ்க் கட்சிகள் மேலிருக்கும் வெறுப்புகள் மற்றும் அதிருப்தியில், ஊழலுக்கு எதிராக மாற்றத்துக்காக மக்கள் திசைதிருப்பப்படுகிறார்கள்.

அவ்வாறு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களிப்பது எமது தலையிலேயே மண் அள்ளிப்போடுவதாக அமையும். அநுர அரசாங்கம் தமிழ் இனப் படுகொலைக்கான நீதியைப் பெற்றுத் தர மறுதலிக்கின்றார். இராணுவத்தைப் பாதுகாக்க விரும்புகிறார். தமிழர்களைக் காக்கும் அரசியல் தீர்வுக்கு அவர் எதிரானவர். அவரது கட்சியினரின் ஆதிக்கத்தை நாம் நிறுத்தாவிட்டால், ஐந்து வருடங்களில் புத்த கோயில்கள் நிரம்பி வடக்கு -கிழக்கு முற்றாக மாற்றியமைக்கப்படும். மாற்றத்துக்காக அநுர அரசுக்கு வாக்கிடுவது தமிழர்கள் தற்கொலை செய்து கொள்வது போன்றது. எனவே சிங்களப் பேரினவாத கட்சிகளுக்கு வாக்களித்து எமது இறையாண்மையை தமிழ்த் தேசிய சுயநிர்ணய உரிமைகளை இல்லாமல் செய்யாது, இளைஞர்கள் ஆகிய எம்மை நாடாளுமன்றம் அனுப்புவதன் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் அடைந்து கொள்ளமுடியும்- என்றார். (ச-26)




# அமைச்சுப் பதவிகளை மக்கள் ஏற்கவில்லை

## *மிதிலைச்செல்வி தெரிவிப்பு*

தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கிறார்களே தவிர அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கவில்லை எனத் தமிழ் மக்கள் கூட்டணி யின் நாடாளுமன்ற வேட்பாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறுமாறு கேட்கவில்லை. மக்கள் மத்தியில் புதியவர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்ற நிலைப்பாடே அநேகமானவர்களிடம் காணப்படுகிறது. எமது கட்சி மட்டுமே புதியவர்களை கொண்ட கட்சியாகக் காணப்படுகிறது. ஆகவே தமிழ் மக்கள் அமைச்சுப் பதவிகளுக்கு விலைபோனவர்கள் அல்லர். அமைச்சுப் பதவிகளுக்காக மக்களை அடகு வைக்கவேண்டாம்- என்றார். (ச-27)

# இளையோரைப் புறக்கணிப்பதே தமிழ் அரசியலுக்குத் தொய்வு

## வேட்பாளர் மயூரன் தெரிவிப்பு

வவுனியா, நவ. 9

தமிழ்த்தேசிய பின்னடைவுக்கும் மக்கள் நம்பிக்கை இழந்தமைக்கும் இளைஞர்களைப் புறந்தள்ளியமையே காரணம். தமிழ்த்தேசியத்தின் பால் சிதைந்துபோன நம்பிக்கையை இளைஞர்களால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும்.

-இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னிமாவட்ட வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் தமிழர் அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள தொய்வுநிலைக்குக்கும் அவநம்பிக்கைகளுக்கும் இளைஞர்களுக்கு வாய்ப்பை வழங்காமல் புறந்தள்ளி யமையே பிரதான காரணமாக அமைந்துள்ளது. தமிழ்த் தேசியத்தை பாதுகாத்து தமிழர் தாயகக் கோட்பாட்டை நிலைநிறுத்தி அதனை அடுத்த தலைமுறையிடம் கொண்டு செல்வதற்கான பணியை இளைஞர்களால்மாத்திரமேசெய்யமுடியும். உரிமை அரசியலைப் புறந் தள்ளி, சலுகை அரசியலைப் பேசு கின்ற கட்சிகளோடு எமது மக்கள் செல்கின்ற நிலையை மாற்றமுடியும் - என்றார். (ச-110)

# வீடு புகுந்து திருட்டு; சந்தேகநபர் மறியலில்

யாழ்ப்பாணம், நவ. 9

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்பாட்டம் தோட்டம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் புகுந்து அங்கிருந்த ஒரு தொகை பணம் மற்றும் அலைபேசி என்பவற்றை களவாடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறி யலில் வைக்கப் பட்டுள்ளார். வீட்டின் உரிமையாளரால் பதிவு செய்யப்பட்ட குறித்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரை கைது செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார், களவாடப்பட்ட பொருள்களையும் மீட்டனர். சந்தேகநபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-27)



# செவ்விளநீருக்கு மவுசு

யாழ்ப்பாணம், நவ.9

யாழ். குடாநாட்டில் செவ்விளநீருக்கு நேற்று வெள்ளிக்கிழமை பெரும் கிராக்கி ஏற்பட்டது. கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்கள் செவ்விளநீரை பயன்படுத்தியதால் அவற்றுக்கு பற்றாக்குறை நிலவியது. செவ்விளநீர் ஒன்று 200 ரூபா முதல் 250 ரூபா வரை விற்கப்படுகின்றது. (ரி-17)


# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 02 . 1947



மறைவு 08 . 11 . 2024

## நல்லம்மா தம்பையா (செட்டியார்)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் 431/1 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா தம்பையா நேற்று (08.11.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-தம்பையா (செட்டியார்) இன் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரீமோகன், ஜெயக்குமார் (மேனகா பிறிண்டேர்ஸ் உரிமையாளர்), உதயராணி, மேனகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெனோபா, சிவனேஸ்வரி, மயூரன் (V.T.N Travels உரிமையாளர்) ஆகியோரின் மாமியாரும் நிதுஷன், ஜீவிதா, வுபீஸ், துவானுசன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

431/1 பிறவுண் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
மயூரன்-077 920 4926
ஜெயக்குமார்-077 814 1219
(மேனகா பிறிண்டேர்ஸ்)

# Angel International School, Manipay

# VACANCIES

## ACCOUNTANT / கணக்காளர்

**Requirements**

* C.I.M.A qualified / ACCA / ACA or equivalent
OR
* AAT fully qualified
* Salary negotiable

## Driver / சாரதி

**Requirements**

* பஸ் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பாரவூர்த்தி சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 60
* ஆகக்குறைந்தது 10 வருட அனுபவம்
* குறிப்பு: 3Km சுற்றுவட்டாரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**Further Details:**
**Mr. Jeevan: 077 844 8020**

Angel International School, Mathers Lane, Manipay.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேருந்து (AC). மற்றும் வான் போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2025**

தவிசாளர். கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம். மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள். அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் (வளாகம்) |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-14 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிக்ள் பேருந்து /Passenger Bus (AC) | 26-30 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |

1. விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை 25.11.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. வாகன முற்பதிவானது 2012ம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர். மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர். பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால். மேற்பார்வை செய்யப்படும்.
5. பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது.
   * பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
   * தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ப்பட்டு இருத்தல் வேண்டும். அல்லது சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் வாகன பயன்பாடு தொடர்பான வெளிப்படுத்தல் விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   * குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   * வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாயினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.
     1.1 பிரயாணிகள் வான். /Passenger Van (10 - 14 இருக்கைகள்) ரூ. 500,000.00
     1.2 பிரயாணிகள் பேருந்து /Passenger Bus (AC) ( 26 - 30 இருக்கைகள்) ரூ. 500.000.00
   * குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய உடல் உள ஆரோக்கியமான சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.
7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள். மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள். மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு வைப்புப்பணமாக (Bid security) ரூபா 15,000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 10.03.2025 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்பு வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக. காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.
9. விண்ணப்பங்கள் யாவும் பிரதானவளாகத்திற்கானவை தனியாகவும் கிளிநொச்சிவளாகத்திற்கானவை தனியாகவும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.
10. முழுமையான தமிழ் மொழியிலான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000. 00 நிதியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில். மக்கள் வங்கி 970000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து சிரேஷ்ட உதவிப்பதிவாளர். பொதுநிர்வாகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும். விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும். மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
12. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2025" எனத் தலைப்பிட்டு தவிசாளர். கேள்விச்சபை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். த.பெ.இ- 57. திருநெல்வேலி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.11.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது நேரடியாகக் கையளித்தல் வேண்டும்.
13. கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)
    திகதி : 18.11.2024 நேரம்: 02:00pm
    இடம் : பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*** ஏலத் திறப்பு (Bid Opening)**

01. திகதி :- 25.11.2024
02. நேரம் :- 02:00 pm
03. இடம் :- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
04. ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில் நுட்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்
05. ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு:

சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை– **Tele: 021 2226517, Fax:- 021 2226517.**

**தவிசாளர், கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**09.11.2024**

(cr) (N-1)


# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குதிடீர்செலவுகளால்கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்ற வர்க ளுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக் கிடையே சிறு பிரச்னை ஏற்படக் கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற் படக்கூடும். புதிய முயற்சிகள் இழுபறியாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறை வேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையி ருப்பு கரையும்.

**கடகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோச னையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க் கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகை யில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடி வுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத் தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவர வுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எதிலும் அவசரமில்லாமல் செயல்பட வேண் டிய நாள். உறவினர்களுடன் வீண் மன ஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறு மையைக் கடைப்பி டிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும் கணவன் மனைவிக் கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறு மையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரத்தில்

**விருச்சிகம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சி கள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**மகரம்:** பிள்ளைகளால் தேவையற்ற செலவு கள் ஏற்படக்கூடும். என்பதால், உணவு விஷயத் தில் கவனமாக இருக்கவும். உறவின ர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.


# மக்கள் முன்னணி பொதுக்கூட்டம் இணுவிலில்

யாழ்ப்பாணம், நவ.9

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டுத் தமிழ்த்தேசிய மக் கள் முன்னணியின் நாடாளுமன்ற வேட்பாளர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை5 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அரு காமையில் இடம்பெறவுள்ளது. இந்தப் பொதுக்கூட்டத்தில் தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 05 . 1969

மறைவு 01 . 11 . 2022

## அமரர் செல்வராஜா ரமேஷ்

(சமாதானநீதவான், உள்ளூராட்சி உதவியாளர்)

*திதி: வளர்பிறை அட்டமி (09.11.2024)*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்திடம் சரணடைந்து ஈராண்டு ஆனதே
சிறந்த குடும்பத்தலைவனாக பாசத்தின் உறைவிடமாக
எமக்கு என்றும் நல்வழிகாட்டியாக திகழ்ந்து
எம் நினைவில் நீங்காது நிலைத்து நின்று
எம்மை வழிநடத்தும் தெய்வம் நீங்கள்.

என்றும் நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# போராளிகளுக்கான அங்கீகாரம் தேவை

## வேட்பாளர் வேந்தன் தெரிவிப்பு

முன்னாள் போராளிகளுக்கான அங்கீகாரம் தேவை என்பதற்காகவே தாம் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ளேன். தாயக நிலப்பரப்பிலே மக்களின் நிம்மதியையும் சுதந்திரத்தையும் உறுதிசெய்ய போராடுவோம் -இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் ஜனாநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தெரிவித்துள்ளார். வடமராட்சியில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைந்திருந்த வடக்கு - கிழக்கையும் பிரித்தவர்கள் இந்த ஜே.வி.பி.யினர் தான். அதேபோன்று சுனாமி கட்டமைப்பையும், இல்லாமல் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை கூட இல்லாமல் செய்தவர்களும் அவர்களே.

அதேபோன்று ஐ.நா.சபையில் கொண்டுவரப்பட்ட போர்க்குற்ற பிரேரணை தொடர்பில் இலங்கையில் போர்க்குற்றம் நடைபெறவில்லை, தாம் எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் விசாரணைக்கு போகத் தேவை இல்லை என்று சொன்னவர்களும் இந்த ஜே.வி.பி.யினர்தான். ஆகவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது எங்கள் தலையில் மண் அள்ளி போடும் செயல். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தகுந்த தீர்வை பெற்றுத்தர போராளிகளால் மாத்திரமே முடியும். அபிவிருத்தியுடன் கூடிய சரியான தாயக சுயநிர்ணயமே எமது இலக்கு - என்றார். (ச-27)

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் புவேந்திரா
## இராஜக்கோன்
*(அரசாங்க மருந்தாளர்)*

மலர்வு 01.09.1941 உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே!
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்

குடும்பத்தினர்.
தபாற்கந்தோர் முன்பாக
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(cs.cs 56593) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 02 . 1931

மறைவு 02 . 11 . 2024

## ஞானேஸ்வரி பொன்னுத்துரை

பெருமாக்கடவை அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி பொன்னுத்துரை கடந்த 02.11.2024 சனிக்கிழமை லண்டனில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், துரைசிங்கம், புவனேஸ்வரி, காசிநாதன், கிருஷ்ணராஜா, தனலட்சுமி மற்றும் தங்கேஸ்வரி (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி, கோபிகிருஷ்ணன், சாந்தினி, சுமதினி (கனடா), ராதாகிருஷ்ணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரன், ஜெயந்தி, கருணாநிதி, செந்தில்நாதன் (கனடா), மாலதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷிகன் - நிவேகா, கீர்த்திகா - திருச்செந்தூரன், ஷயமீரா - சயந்தன், ஷயன், ஜிவ்வியா - ரஜீவன், தீபிகா - ரமணன், அனோஜன், நிருஜன் - நிஷானி, ஆருஜன், கவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிஷால்யன், தனுக்ஷால்யன், ஆருத்திரன், ஆதிரன், தயூரன், ஜேடன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 164 4046

இலகடி,
சங்கானை.

(CS/) N-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 07 . 1947

மறைவு 06 . 11 . 2024

## தர்மலிங்கம் இராமசந்திரா (லிங்கம்)

(ஓய்வுநிலை அரச பண்ணை முகாமையாளர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட இராமசந்திரா (லிங்கம்) கடந்த 06.11.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பாலாம்பிகை தம்பதியரின் மருமகனும், ரஜனியின் (ஜெயந்தி- புளியங்கூடல்) அன்புக் கணவரும், நிரூசியா (லண்டன்), தனுஷன் (லண்டன்), நிரூஷன் (கனடா), நித்யா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனனி, பிரியா, யசான் ஆகியோரின் அன்பு மாமனாரும், டானியா, சியானா, ரதீஷா, தணீஷா, அஸ்வின், ஆரவ் ஆகியோரின் அன்புப் பாட்டனும், இலச்சுமிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகம்மாள், பூபதி, இராஜரெட்ணம் மற்றும் திலகம், பாலகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.11.2024) சனிக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிதொடக்கம் 1.30 மணிவரை The Respect Home, 483, Bauddhaloka Mavatha, Colombo 8இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
பெறா மகன்
076 666 1351

(CS/56631) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், நவ. 9
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்
டணி யின் தேர்தல் பரப்புரைக்
கூட்டம் வலிகாமம் மேற்கு பிர
தேசசபை மண்டபத்தில் நாளை
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3
மணிக்கு இடம்பெறவுள்ளது.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்
டணியின் ஒன்பது வேட்பாளர்க
ளும் இதில் கலந்துகொள்கின்ற
னர்.
(ம-26)

# யானை தாக்கி ஒருவர் காயம்

முல்லைத்தீவு, நவ. 9
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்
தில் யானைத் தாக்குதலுக்கு உட்பட்ட
குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயம
டைந்த நிலையில் மருத்துவமனை
யில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஒட்டுசுட்டான் இத்திமடுப் பகுதியில்
வயல் காவலுக்காகச் சென்றுவிட்டுத்
திரும்பிக் கொண்டிருந்தவரே இவ்
வாறு யானைத் தாக்குதலுக்கு உள்ளா
கியுள்ளார். அவர் ஒட்டுசுட்டான் பிரதேச
மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு,
மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு
மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்
பட்டுள்ளார். இது தொடர்பான விசார
ணைகளை பொலிஸார் மேற்கொண்டு
வருகின்றனர். (அ-ம-19)

# முறைப்பாடு 2,000+

நீலங்கா நாடாளுமன்றத் தேர்தல்
டர்பில், இதுவரை இரண்டாயிரத்
க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்
பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரி
விக்கப்பட்டுள்ளது. இதன்படி, இது
வரை 2 ஆயிரத்து 88 முறைப்பாடுகள்
பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும்
அவற்றில் மாவட்டத் தேர்தல் முறைப்
பாட்டு முகாமைத்துவ நிலையங்க
ளுக்கு ஆயிரத்து 558 முறைப்பாடு
களும், தேசிய தேர்தல் முறைப்பாட்டு
முகாமைத்துவ நிலையத்திற்கு 475
முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்
ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
தேர்தல் வன்முறைகள் சிலவும் பதிவா
கியுள்ளன. (அ-ம)

# இந்திய மீனவர்கள் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 9
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி
மீன்பிடித்த குற்றஞ்சாட்டில் கைதுசெய்
யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேர்
நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து
ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி இந்த
மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்த
னர். அவர்களுக்கு எதிரான வழக்கு
விசாரணைகள் பருத்தித்துறை நீதிமன்
றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்
துக்கொள்ளப்பட்டது.
மீனவர்கள் அனைவருக்கும் தலா ஒன்
றரை வருடங்கள் சிறைத்தண்டனை
விதித்த நீதிமன்றம் அதை 10 வருடங்க
ளுக்கு ஒத்திவைத்து அவர்கள் அனை
வரையும் விடுவித்தது. இதன்படி,
அடுத்த 10 வருடங்களில் மீனவர்கள்
மீண்டும் அத்துமீறலில் ஈடுபட்டால்,
அவர்கள் தற்போது விதிக்கப்பட்ட ஒன்
றரை வருட சிறைத்தண்டனையை
யும் சேர்த்து அனுபவிக்கவேண்டிவரும்
என்பது குறிப்பிடத்தக்கது.
(அ-ம-100)

'ஈழத்து சௌந்தரராஜன்'

# விஜயரட்ணம் மறைந்தார்!



யாழ்ப்பாணம், நவ. 9
ஈழத்து சௌந்தரராஜன் என அழைக்கப்படும்
நாகர்கோவில் வைரவப்பிள்ளை விஜயரட்ணம்
(வயது - 81) நேற்று அதிகாலை காலமானார்.
தென்னிந்தியப் பாடகர் சௌந்தரராஜன் இலங்
கைக்கு வந்திருந்த போது பருத்தித்துறை பகுதியில்
இடம்பெற்ற இசைக் கச்சேரியின் போது நாகர்கோ
வில் விஜயரத்தி னம், சௌந்தரராஜன் பாடிய பாடல் ஒன்றை பாடி பலருடைய
பாராட்டையும் பெற்றார். அன்றுமுதல் ஈழத்து சௌந்தரராஜன் என்று அழைக்கப்
பட்ட அவர் உடல்நலக் குறைவால் நேற்றுக் காலமானார். (அ-ம-100)

## வடக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்
ததாவது:-
இலங்கைக்கு அருகாகவும், அந்தமான்
தீவுக்கு அருகாகவும் இரண்டு காற்றுச்
சுழற்சிகள் உருவாகியுள்ளன. இதனால்,
வடக்கில் எதிர்வரும் 12ஆம் திகதிவரை
கனமழைக்குச் சாத்தியம் உள்ளது.
மழை பொழிவின்போது இடையிடையே
இடிமின்னலுக்கும் சாத்தியங்கள் காணப்
படுகின்றன. எனவே, மின்னலால் ஏற்ப
டக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் அவதா
னமாக இருக்கவேண்டியது அவசியம்.
இந்த மாதத்தில் இன்னும் இரண்டு
தாழமுக்க நிகழ்வுகள் தோன்ற வாய்ப்
புள்ளன.
அதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி
யன்று இன்னொரு தாழமுக்கமும் உரு
வாகவும், அது ஒரு புயலாக மாற்றம்
பெறவும் வாய்ப்புகள் உள்ளன. அவ்
வாறு மாற்றம் பெற்றால் அது வடக்கு
மாகாணம் நோக்கியே நகரும் வாய்ப்புள்
ளது. எனினும், இது வங்காள விரிகுடா
வின் கடல் மேற்பரப்பு வெப்பநிலையைப்
பொறுத்து மாற்றமடையவும் சந்தர்ப்பங்
கள் உள்ளன - என்றார். (அ-ம-66)

## படகுச்...

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியில் அமைந்
துள்ள வடக்கு ஆளுநர் செயலகத்தில்
நேற்றுக் காலை இந்தக் கலந்துரையா
டல் இடம்பெற்றது.
காங்கேசன்துறைச் சுங்கத்தில் இரண்டு
கருமபீடங்களே தற்போது காணப்படு
கின்றமையால் பயணிகள் வெளியேற
நேரதாமதம் ஏற்படுகின்றது. எனவே, மேல
திகமாக இரண்டு கருமபீடங்களைச் செயற்
படுத்துமாறு துறைமுக அதிகாரசபை
அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட் டது.
துறைமுகத்தில் கடமையாற்றும் பாது
காப்பு அதிகாரிகள் மற்றும் ஊழியர்க
ளின் நடத்தைகள் தொடர்பில் முறையி
டப்பட்ட நிலையில், அந்த முறைப்பாடுகள்
தொடர்பில் உரியவகையில் விசாரணை
மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்
கையைத் துரிதமாக மேற்கொள்வதற்
கான அறிவுறுத்தல் வடக்கு ஆளுநரால்
இதன்போது வழங்கப்பட்டது.
துறைமுகம், மற்றும் விமானநிலையப்
பகுதியில் சேவையில் ஈடுபடும் முச்சக்க
ரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின
ரின் கருத்துகள் மற்றும் அவர்கள் எதிர்
நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும்
கவனம் செலுத்தப்பட்டுக் கலந்துரையா
டப்பட்டது. (அ-ம-26-66)

## படையினர்...

தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தி
யின் பரப்புரைக்கூட்டம் ஒன்று யாழ்ப்பா
ணத்தில் நேற்று இடம்பெற்றது. இதில்
கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்
போதே பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரி
வித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போர்க் காலத்தின்போது காணிகள் படை
யினருக்குத் தேவையாய் இருந்தது.
ஆனால், தற்போது அந்த நிலைமை
இல்லை. எனவே, வலி. வடக்கு உட்பட
அனைத்துப் பகுதிகளிலும் படையின
ரின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்
கப்படும். மக்களின் காணிகளை மக்களி
டம் ஒப்படைப்பதில் அரசாங்கம் உறுதி
யாகவுள்ளது. எனவே, நிச்சயம் நாங்கள்
அதை நிறைவேற்றுவோம் - என்றார்.
(அ-ம-26)

## இடைவிலகிய...

யாழ். மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக்
குழுவின் மூன்றாவது காலாண்டுக்குரிய
குழுக்கூட்டம் யாழ். மாவட்டச் செயலகக்
கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கி
ழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்
பாண பதில் மாவட்டச் செயலர் மருதலிங்
கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்
றது. இந்தக் கூட்டத்தின்போதே கற்றல்
செயற்பாடுகளில் இருந்து இடைவிலகிய
மாணவர்களை மீண்டும் இணைப்பது
தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.
மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவ
டிக்கை எடுக்கும்போது அதிபர் தன்னிச்
சையாகத் தீர்மானம் எடுக்காது ஒழுக்
காற்றுக்குழு அமைத்து நடவடிக்கை
எடுப்பதனை வலயக் கல்விப் பணிப்பா
ளர்கள் உறுதிப்படுத்தவேண்டும் என்றும்
இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதுவரை சிறுவர்களுக்கான பிறப்பு அத்
தாட்சிப் பத்திரம் பதிவு செய்யாதவர்களுக்
கான நடமாடும் சேவையினை டிசெம்பர்
மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் நடத்து
வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-66)

## வெடுக்குநாறி...

கள் இருவரை பயங்கரவாத புலனாய்வுப்
பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்
ளனர்.
வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை
ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்
னாள் தலைவர் சசிகுமார் மற்றும் முன்
னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகி
யோருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்
கப்பட்டுள்ளது.
முன்னாள் போராளியான சசிகுமாரின்
அனைத்து புனர்வாழ்வு ஆவணங்க
ளையும் விசாரணைக்கு கொண்டு வரு
மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
(அ-ம-18-66)

## சமூக...

யொன்றை வெளியிட்டுள்ளது. கொரோ
னாத் தொற்றின்போது மாணவர்கள்
தவறவிட்ட கற்றல் வாய்ப்புகளை மீட்டெ
டுக்க உதவும் வகையில் வட்ஸ் அப்,
வைபர் மற்றும் டெலிகிராம் போன்ற சமூக
ஊடகங்கள் வழியாகக் கற்றல் செயற்பா
டுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால்,
அவை இன்றும் மாணவர்களால் பரவ
லாகப் பயன்படுத்தப்படுகின்றன. மாண
வர்கள் இந்தச் சமூக ஊடக செயலி
களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்து
வதால் எதிர்மறையான விளைவுகள்
ஏற்படுகின்றன. எனவே இந்த விடயத்
தில் கூடுதலான கண்காணிப்புகள்
தேவை என்று கல்வி அமைச்சின் சுற்ற
றிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்
ளது. (அ-ம-6)

## தடுப்பூசி!...

பூராகவும் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதற்கமைய, இன்றையதினம் அள
வெட்டிப் பிரதேச மருத்துவமனை, இள
வாலைப் பிரதேச மருத்துவமனை,
தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதி
காரி பணிமனை ஆகியவற்றில் குறித்த
தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளமுடியும்.
20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்க
ளுக்கு இந்தத் தடுப்பூசியை ஏற்றுவ
தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்
ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

கடை- கஸ்தூரியார் வீதி,
மேல்மாடி பில்டிங்- நாவலர் வீதி 2700 ச. அடி,
நாற்சார் வீடு- கந்தர்மடம்
**கம்பனி நிறுவனங்கள் விரும்பத்தக்கது**

தொடர்பு: 076 071 2676
077 665 9736
021 222 3479

# மக்களின் தீர்ப்பே 5 வருடத் தலைவிதி!

### ஜனநாயகத் தேசியக் கூட்டணி வேட்பாளர் கு.விஜேந்திரரத்தினம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.9

மக்களுடன் மக்களாக வாழ்ந்து மக்களது பிரச்சினைகளை அறிந்தவர்களுக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும். மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நாள். அந்த நாளில் மக்கள் எடுக்கும் தீர்மானமே உங்களது 5 வருட தலைவிதியை தீர்மானிக்கப் போகிறது.

இவ்வாறு ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளரும், தொழிலதிபருமான கு.விஜேந்திரரத்தினம் (விஜயன்) தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பலர் போட்டியிடுகின்றனர். அவர்களில் பலருக்கு எமது மக்களின் துன்பங்களும், துயரங்களும் தெரியாதவர்கள். எனவே, மக்கள் தமது வாக்குகளை பயன்படுத்தும் போது கவனமாகவும், நிதானமாகவும் பயன்படுத்த வேண்டும்.

மாற்றத்தை நோக்கி நகரும் மக்கள் உங்களுடன் ஒன்றாக இந்த மண்ணில் பயணித்தவன் என்ற அடிப்படையிலும், உங்களது சுக துன்பங்களை அறிந்தவன் என்ற வகையிலும் நீங்கள் எதிர்பார்க்கும் ஒரு மாற்றத்தை இந்த மண்ணில் ஏற்படுத்த முடியும் - என்றார்.

(ச-18)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 84 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- கடற்கரையை (**Beach**) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

(cs.56628) (N-1)

## கடா ஆடு விற்பனைக்கு

தாவடியில் சணல் கடா ஆடு
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
**077 605 9613**

## வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் இருவர் தங்கக்கூடியதாக வீட்டின் ஒரு பகுதி வாடகைக்குண்டு. சைவ உணவு சாப்பிடுபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **976 807 9283**


# வரதாஞ்சலி மலர் வெளியீடும் நினைவுப் பேருரையும்

**திகதி**
**10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) 10.30 மு.ப**

**இடம்**
**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் நல்லூர்**

**நிகழ்ச்சி நிரல்**

10.30மு.ப உருவப்படம் திரைநீக்கம்
10.31மு.ப அமரருக்கு மலர்மாலை அணிவித்தல்
10.32மு.ப விளக்கேற்றல்
11.00மு.ப "வரதாஞ்சலி" மலர் அறிமுகம்
11.15மு.ப நினைவுப் பேருரை
12.30பி.ப அமரர் நினைவுதினச் செயல்திட்டங்கள் முன் அறிவிப்பு
1.00பி.ப நன்றியுரை
1.10பி.ப மதியபோசன உபசரிப்பு



வையகம் போற்றும் நல்லாசானாக வாழ்ந்து நன் மாணாக்கர் பலரை உருவாக்கி இன்றும் எங்கள் மனங்களில் நிறைத்திருக்கும்

அமரர்
**தம்பிப்பிள்ளை வரதராஜா B.Ed**

**மேற்படி நினைவுப் பகிர்வுசார் மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்தும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசரிப்பிலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

THE EXPRESS INSTITUTE KOPAY A BOON TO STUDENTS

ஏற்பாட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.